# பேசும் ஆதி தமிழ் எழுத்துக்கள்

— தமிழின்

பெருமைக்குரிய

கண்டுபிடிப்புகள்

எழுதியவர் :

பேராசிரியர் ந. ஞானசம்பந்தன் B,E, (Rtd)

மனித மேம்பாட்டு வெளியீடு

*''தழல்புரை நிறக்கடவுள் தந்ததமிழ்''

—கம்பன்

*''செந்தமிழ் ஆதி தெளிந்து வழிபடு''

பா-1089 திருமூலர் திருமந்திரம்-3000

*செந்திறத்த தமிழ்ஓசை வடச்சொல்லாகி''

பா-4, திருமங்கை ஆழ்வாரின் நெடுந்தாண்டகம்-30

*''எழுத்து அறியத்தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டு அறுப்பானாகும்-மொழித்திறத்தின்
முட்டுஅறுத்து நல்லோன் முதுநூல் பொருள் உணர்ந்து
கட்டுஅறுத்து வீடுபெறும்''

— இப்பா இயற்றியவர் யார் என்று இன்றுவரை
அறியமுடிய இல்லை

# கன்னி தாய் தெய்வம்

**Virgin Mother Goddess**
**(a concept)**



ஐம்பூ தம் இறாம் முவ்வுரி முவ்வுடல்
ஐம்புலம் ஏல் உணர்ச் சிஉட் கரணமாய்
வினை விளை செய் தாய் யுடன் உறை உணர்வே
உனை ஐம் போழ்தும் நினைந்து வணங்குவன்.

These 33 (24+5+4) letters of the alphabet of the Virgin language bear similitude, in number, to the 33 (24+5+4) vertebrae of a new-born child, besides its 24 main ideographs depicting its birth and the general functioning style of its psychic system in the growth of its own personality through its life-span.

These concepts innate

**விளக்கம் :**

மனிதப்படைப்பு, இயற்கை எனும் தாய் தெய்வத்தின் எண்ணிறந்த எழில்மிகு படைப்புகள் யாவற்றிலும் மகிமைக்கும் பெருமைக்கும் முதன்மையானதாகும். இம்மனிதப்பிறவி மாத்திரம் பல தனி சிறப்புகளை பெற்றுள்ளது. முதன்மையாக, இம்மனிதப் பிறவியின் உணர்வுக்கு மாத்திரம் ''தான்'' (Impersonal-self signified by the involuntary nervous system) என்றும், நான் (personal-self, represented by the voluntary nervous system) என்றும், இரண்டு பாகுபாடாக பகுத்தறிந்து இயங்கும் 6 ஆம் அறிவு தரப்பட்டுள்ளது. இரண்டாவதாக, நாக்கு உடைய மற்ற உயிர் இனங்களுக்கு இயலாத பேசும் திறன் அல்லது ஆற்றல் மனித இனத்தின் மூளைப்பகுதி மாத்திரம் பெற்றுள்ளது. மூன்றாவதாக, தன் ஆறாவது பகுத்தறிவை பயன்படுத்தி, தன் நாக்கைக் கொண்டு, தன் நினைவின் ஆட்சிமையில் எழும் எண்ணங்களை பேச்சொலிகளாகவும் எழுத்துக்கள் மூலம் வரைமொழியாகவும் இலக்கணத்தோடு வெளிப்படுத்தி இதனால் மனித இனத்தில் வளர்ந்து வரும் அறிவை முக்காலத்திலும் சேய்மையிலும் பயன் படும்படி செய்துவரும் ஆற்றல் இம்மனித பிறவிக்கு மாத்திரம் இயற்கை தந்துள்ளது.

மேலும், இம்மனிதப்பிறவி மாத்திரம், "இறைவனின் சாயலில் படைக்கப்பட்டுள்ளது'' என்றும், ''மனிதனின் உடலே இறை வனின் கோயில்'' என்றும் உலக மறைகள் ஆதிகால முதல் கூறி வருகின்றன. தவிரவும், தாய் தந்த மனித உடலை கன்னித்தாய் என்றும், தேகத்தாய் என்றும், இறைவி என்றும் கூறி வரு கின்றனர்; இம்மனித உடலில் உள் உறையும் ''தான்'' எனும் அக உணர்வுக்கு, அதாவது ''ப்ரஜ்ஞாநத்திற்கு, அரன், பரன், அல்லா, கடவுள், பரமன், ப்ரஹ்ம, தெய்வம், ஆண்டவன், கர்த்தன், இறைவன் என்பது போன்ற பல்லாயிரம் திருப்பெயர் களை சூட்டி மக்கள் நித்தமும் தொழுகின்றனர். இதுவே மும்மை யில் ஒருமையாய் உள்ள உள்ளுணர்வு எனும் உத்தமப்பொருள். இம் மூலப்பொருளை பூசையால் அல்லது துதியால் தன்னுள் காண்பவர், அப்பொருள்தான் அண்டம் அளாவி எங்கும் நிறைந்து,

யாவும் உணர்ந்து, எல்லாம் வல்ல பொருளாய் இருந்து, படைப்புகள் யாவற்றையும் தோற்றுவித்து, அவற்றினில் குடியும் கொண்டு, ''அலகு இலா விளையாட்டுகளுக்கு'' உரியதாய் உள்ளது எனும் உண்மையை உணர்கின்றனர். இப்பெருமைகளை எல்லாம் மனிதப்பிறப்பு ஒன்றுதான் உணர்வதற்கு உரியதாய் இருக்கின்றது.

மேற்கூறியவாறு பல சிறப்புகள் மிக்க இம்மனிதப்பிறவியை ஒரு ''eternal model'' ஆக ஏற்று, பலவாறு, வெவ்வேறு கோணங்களில், பல வகைப்பட்ட துறைகளில் எந்நாட்டு சான்றோர்களும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பிருந்தே, காலம் காலமாக, நேர்முகமாகவும், மறைமுகமாகவும் புகழ்ந்து பாராட்டிக் கொண்டு வருகின்றனர். அவைகளை போன்றே, ஒருமொழியை படைப்பதற்கும், மனித உடலை ''eternal model'' ஆக ஏற்று, அதற்கு எண்ணிக்கையிலும், தத்துவக்கோட்பாட்டிலும் ஒப்பாய் அமைக்கப்பட்ட 24/33 கன்னியெழுத்துக்கள் எனப்படும் எளிய வரிவடிவங்கள் கொண்ட கருத்துக்களை படைத்து, அவைகளை ஒரு மொழியின் நெடுங்கணக்காய் அமைத்து, அவற்றின் கருத்துப் பிறப்புகளிலிருந்து கன்னிச்சொற்கள் யாவும் ஆழ்ந்த பகுத்தறிவோடு தோற்றுவித்து, கன்னிமொழி எனும் தமிழினை உருவாக்கியுள்ளனர்.

இவ் உண்மையை ஆய்வு செய்யாமல், இங்கே கூறியுள்ள கூற்றை மாத்திரம் படித்துவிட்டு ஏற்க முடியாத நிலைமை தோன்றுதல் இயல்பாக எதிர் பார்க்கக்கூடியதுதான். ஆனால் இக்கூற்றை மெய்தான் என்று உறுதி அடைய, பல விதத்தில் பரவலாக அமைந்த நெடும் ஆய்வுகளின் சான்றுகளை ஆர்வத்துடன் அறிந்தால்தான், முடியும். இதனை நன்கு உணர்ந்திருந்தால் தான், இவ் வரையுரையை படிப்பவர்கள் மேலும் வேண்டிய முயற்சியை எடுத்து தங்கள் மனசாட்சியை நேர்மை படுத்தி நம்பும் நிலையை அடைய முடியும்.

மேற்கூறியவாறு, ஒரு மனிதப்பிறவியின் 33 முதுகெலும்புகளுக்கு எண்ணிக்கையில் ஒப்பாக கன்னிமொழியின் நெடுங்கணக்கு

எழுத்துக்களையும் 33 என அமைத்து, அவற்றில் துணை எழுத்துக் களாய் உள்ள 9 நீங்கலாக, எஞ்சிய 24 முதன்மை எழுத்துக்களை மாத்திரம், இவண் அடுத்து விளக்கியுள்ளவாறு, நாற்கண கோட் பாடுகளின் அடிப்படையில், மனிதப்பிறவிக்கு ஒப்புமை படுத்தி, அக்கருத்துக்களுக்கு தக்கவாறு அவற்றிற்கு வரிவடிவங்களையும், ஒலிகளையும் பெருமை பொருந்த அமைத்துள்ளனர். இப்பெருமை ஆதியில், அதாவது மனித இனம் 2 மில்லியன் ஆண்டு அளவில் ஆப்பிரிக்காவிலிருந்து ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய கண்டங்களுக்கு பரவி சென்ற காலத்திற்கும் முந்தி, மனித இனம் அனைத்தும் ஆப்பிரிக்க கண்டத்தின் புவி மய்யத்தில் ஒரே தொகுப்பாகவும் ஒரே சமூகமாகவும் வாழ்ந்த காலத்தில் இருந்த ஞானிகளை சாரும் எனலாம்.

இவ்வாறு ஞானிகளின் ஞான உணர்வால் படைக்கப்பட்ட கருத்துருச்சின்னங்கள் எக்கருத்துக்களை குறிக்கின்றனவோ அக் கருத்துக்களின் அடிப்படையிலேயே கன்னிமொழியின் சொற்களை யும் அவற்றின் பொருண்மைகளையும், பன் பொருள்களின் விரிபு களையும் ஆழ்ந்த அறிவியல் நோக்கோடு சீர்மையும் செம்மையும் பொருந்த வளர்த்து, இம்மொழிக்கு, ''(அறிவுக்கு) கவர்ச்சி(யுறு) தலைவி'' எனும் பொருண்மையுடைய ''தம் + இழ்'' எனும் இரு சொற்கள் சேர்ந்த ''தமிழ்'' எனும் தொடர்மொழியால் பெயர் சூட்டி அழைத்துள்ளனர்.

இவ்வாறு உலகில் "Invention Theory" இன் அடிப்படையில் தொன்மையிலேயே முதன்முதலில் தோற்றுவிக்கப்பட்டு "Covenant Theory"இன் அடிப்படையில் 2 மில்லியன் ஆண்டளவில் உல கெங்கும் மனித இனம் பரவியபோது அவர்களோடு பரவிய பொது மொழி கன்னிமொழி என்பது புலனாகின்றது.

ஆகவே மேற்கூறிய அரிய கண்டுபிடிப்புகளின் உண்மைகளை யும் பெருமைகளையும் யாவரும் இன்று உணர வேண்டியவர்களா கின்றோம். இதனை சுட்டி உணர்த்துவதே, இவண், தேகத்தாய்க்கு ஒப்பாகவும், ஒரு கோட்பாடாகவும் ஏற்கப்பட்டுள்ள கன்னித்தாய் தெய்வப்படத்தின் கீழ், நான்கு வரியில் தந்துள்ள 24 ஆதி

எழுத்துக்களை, அதாவது நாற்கண எழுத்துக்களை, பற்றிய விளக்கத்தின் நோக்கமாகும். இவ் எளிய வரி வடிவில் அமைக்கப் பட்டுள்ள கருத்துரு சின்னங்களே கன்னி மொழியின் முதன்மை யான 24 சித்திர எழுத்துக்களாம். இவை, அடுத்து இங்கு சுருக்கமாக விவரித்துள்ளவாறு, மனிதப்பிறவியின் மெய்யை, பேசாமல் பேசும் பதுமைகள் போன்று, சித்தரித்துக்காட்டுகின்றன.

**வரிசை 1: ஐம்பூத தொகுப்பும், 6-இடையின எழுத்துக்களும்:**

சிறப்புக்குரிய ஒரு மனிதப்படைப்பின் தோற்றத்தில், அன் புணர்வு எனும் மெய்ப்பொருள், தாய்வித்துடன் தந்தை வித்தை ஒன்றாக கூட்டிய உடன், அது, ''பரமாய சக்தியுள் பஞ்சமாபூதம் தரம் மாறில் தோன்றும் பிறப்பு'' என்று ஔவைபிராட்டியார் தன் ஞானக்குறள், அதிகாரம்-1, பா-2இல் கூறியுள்ளது போன்று, ள–எனும் எழுத்தால் குறிக்கப்படும் ஒரு தெய்வீக தாய்மை சக்தி யால், ய, ர, ல, வ, ழ எனும் எழுத்துக்களால் முறையே குறிக்கப் படும் காற்று, தீ, நிலம், நீர், விண் எனும் ஐம்பூதங்கள் ஒன்று சேர்ந்து உள்புற உறுப்புக்கள் உருவாகின்றன.

**வரிசை 2: மூவ்வுடலும், 6-வல்லின எழுத்துக்களும்:**

மேற்கூறியவாறு உருவாகும் உறுப்புகள் யாவும் க, த, ற, எனும் எழுத்துக்களால் குறிக்கப்படும் ஓங்கார மும்மையின் உள்ளம், உடல், உயிர் ஆகியவற்றிற்கான மூன்று தொகுப்பு களுக்குள், அதாவது கோசங்களுக்குள், ஒன்றுக்கொன்று துணை யாய் அமைந்து முழுமை பெற்ற ஒரு மனிதப்பிறவி உருவா கின்றது. இவற்றில் த–எனும் திடவுடலை ட-எனும் கையும், உயிரை ஆற்று படுத்தும் ற–எனும் மூளையை ப-எனும் கபாலமும், க-எனும் உள்ளுணர்வை ச–எனும் நற்பண்பும் காக்கும் உரிமை களை ஏற்றுள்ளன என்பதை 6 வல்லெழுத்துக்கள் மூலம் தத்துவமாக அமைத்து காட்டப்பட்டுள்ளன.

**வரிசை 3: ஐம்பொறி தொகுப்பும், 7-நெட்டுயிர் எழுத்துக்களும்:**

ஒரு சூல் கருதரித்த 280–ஆம் நாளில், தன் தாய் கருவறை யிலிருந்து பூரணம் அடைந்து உலகில் ஒரு சேயாக பிறக்கின்றது

அந்நொடி முதல், ''தான்'' எனும் அகவுணர்வு போ
''நான்'' எனும் அதன் புறவுணர்வும் ஐ-எனும் தலையை
இருக்கைக்கு வீடாக ஏற்று, அது ஓ-எனும் மெய், ஆ-எனும் வ
ஈ-எனும் கண், ஊ-எனும் மூக்கு, ஏ-எனும் செவி ஆகிய ஐம்பெ
களையும் அவற்றின் ஐம்புலன்களையும் தன்னுடைய அரைபங்க
அமைந்த ஔ-எனும் சக்தியால் ஆற்றுபடுத்த தொடங்கி
கின்றது.

**வரிசை 4: உட்கரணத்தொகுப்பும், 6-மெல்லின எழுத்துக்களு**

மேற்கூறியவாறு ஐம்பொறிகளின் வழியாக ஐம்புலன்களு
இயங்கும் நினைவு நிலையில், ம-எனும் எழுத்தால் குறிக்கப்படு
உத்திசெய் அகபுற உணர்வு (intellect), தன் விழிப்பு காலத்தில்
ஞ-எனும் மனம், ண-எனும் புத்தி, ங-எனும் சித்தம், ந-எனு
ஆங்காரம் ஆகிய நான்கு உட்கரணங்கள் இடையறாது இயங்கி
உலகில் எல்லா செயல்களையும் ஆற்றிக்கொண்டு இருப்பதின்
மூலம் அப்பிறவியின் ன-எனும் தன் ஆளுமையை எஞ்ஞான்றும்
உலகுக்கு விளக்கிக்கொண்டு இருக்கின்றது.

மற்றும், அ, இ, உ, எ, ஒ எனும் குற்றுயிர் சுட்டெழுத்துக்
கள் 5 ஆகும். இ், உ், அ்ம் எனும் குற்றியல் ஒலியாக சொற்களில்
சார்பாய் இயங்கும் புள்ளி எழுத்துக்கள், மகர குறுக்கத்தை
**தனித்து நோக்கில்**, 4 ஆகும். இவ் 9 எழுத்துக்களும் தம்தம் இனம்
சார்ந்த முதன்மை எழுத்துக்களில் இருந்து விரிந்து, அவை கன்னி
மொழியின் துணையெழுத்துக்கள் ஆகின்றன.

ஆகவே, கன்னி மொழியின் மொத்த எழுத்துக்கள் 33 =
நாற்கண எழுத்துக்கள்-24, + குற்றுயிர்-5, + புள்ளி எழுத்துக்
கள்- 4. இவ் எண்ணிக்கை, இதே முறையில் ஒரு சேயின் முது
கெலும்புகளுக்கு ஒப்பாக அமைக்கப்பட்டிருப்பதை அறியலாம். ஒரு
சேயின் அசையும் முதுகு எலும்புகள்–24; இடுப்பு எலும்புகள்–5;
கடை குறுத்து எலும்புகள்-4; ஆக மொத்தம் முதுகெலும்புகள் 33.
இவ் எண்ணிக்கையே, வேதக்கடவுள்கள்-33, விண்மீன்கள் 33/27
என, 33 வரும் இடங்களுக்கு எல்லாம் ஆதாரமாகும்,

எனவே, எக்காலத்தில் மனிதன் தன் பகுத்தறிவால் அந்தணன் அல்லது ஞானி எனும் நிலையை அடைந்து, அந்நிலையில் இருந்து ''தன்னை இறைவனின் சாயலில் படைத்துள்ளான்'', என்று அறிந்தானோ, அக்காலத்திலேயே அவ் ஆன்ற மனிதன், மனித இனத்தின் மேம்பாட்டிற்காக, இறைவனின் சாயலில் ஒரு உலக பொது மொழியையும் படைத்துள்ளான் என்பதும், அதுவே மேல் விவரித்த கன்னி எழுத்துக்களுக்கு உரிய கன்னிமொழி என்பதும் நன்கு புலனாகின்றன. இவ் எழுத்துக்கள் பற்றிய முழுமையான உண்மை விவரங்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக சமூக ஞானிகள் அல்லது அந்தணர்கள் எனும் பாரம்பரியத்தில் மிக மிக இரகசிய மாக "Relay Race" போன்று கைமாறி வந்திருந்து, கி.மு. 1000 ஆண்டளவில் மேலும் பல ஒலிகளும் அதற்கு ஏற்ப எழுத்துக்களும் பெருக்கப்பட்டு, அவை பிராமீ எழுத்துக்கள் எனும் பெயரை பெற்று சமூகத்தின் பொதுமை பயனுக்காக வெளிப்படுத்தப்பட்டிருக் கின்றன. இதனால் ஆதி கன்னி எழுத்துக்கள் தம் முன்னிலை பயனை இழந்துள்ளன எனலாம்.

மேலும், 2 மில்லியன் ஆண்டளவில் உலக மனித இனத்தின் மொத்த தொகை ஒரு சில இலட்சங்களே இருந்துள்ளன. இம் மக்கள் அனைவரும் ஒரே சமூகமாகவும் ஆப்பிரிக்காவில் வாழ்ந் துள்ளனர். அப்போது ஆப்பிரிக்கா எனும் கண்டம் எல்லா பக்கமும் கடலால் சூழப்பட்ட சம்புத்தீவு எனும் ஒரு நிலப்பரப்பாக இருந் துள்ளது. இக்கண்டத்தின் பூமத்திய இரேகை அருகில் உள்ள மேருமலையை சூழ்ந்து மேற்கூறிய மனித இனம் ஒரே குழுவாக வாழ்ந்துள்ளது. கி.மு. 2 மில்லியன் ஆண்டளவில்தான் ஆப்பிரிக்கா எனும் தீவு ஆசிய கண்டத்துடன் இணைந்துள்ளது. இக்காலம் முதல் மனிதஇனத்தோர் ஐரோப்பா, ஆசியா, ஆஸ்தி ரேலியா, அமெரிக்கா ஆகிய கண்டங்களுக்கு ஆப்பிரிக்காவில் இருந்து பிரிந்து சென்றுள்ளனர். இவர்கள் அனைவரும் பல்லாயிரம் ஆண்டின் இடை வெளியில் பல காரணங்களால் பல இனத்தவராகவும், பல மொழியினராகவும் மாறியுள்ளனர்.

மேற்கூறியவாறு மனித இனம், பல கண்டங்களுக்கு பிரி செல்வதற்கு முன்பு, ஒரே சமூகமாக வாழ்ந்த காலத்திலேயே மே விவரித்துள்ளவாறு பல சிறப்புகளுக்கு உரிய மனிதனின் மெய்க் கன்னிமொழிக்கு உரிய நெடுங்கணக்கின் எழுத்துக்கள அவற்றின் எண்ணிக்கையிலும் தத்துவக்கோட்பாடுகளிலு ஒப்பாக சான்றோர்கள் படைத்துள்ளனர். இதன் ஏதுவ மனிதனின் மகிமையையும் மனித இனத்திடையே ஒருமை உ வையும், இவற்றின் புனித விளைவாக உலக அமைதியை போதிக்கும் மேன்மையான நோக்கத்தை உலக ஐக்கிய ச என்பது ஒன்று இல்லாமல் இருந்த ஆதிகாலத்திலேயே ம இனத்தின் சான்றோர்கள் ஏற்றிருந்தனர் என்பது திண்ணமாகவு வெளிப்படையாகவும் தோன்றுகின்றது. இவ்வாறு "மனித **மதம்"** என்ற கோட்பாட்டை போதிக்கும் மொழியாக கன் மொழி அமைக்கப்பட்டுள்ளதால் இம்மொழி மனித இனத் பெருமைக்கு உரிய ஒரு பொதுச்சொத்தாகும். ஆகவே இ உண்மைகள் யாவற்றையும் உணர்ந்து கன்னிமொழியை மிக போற்றி, புகழ்ந்து, பாராட்ட உலகில் உள்ள எம்மனிதனுக் நன்றி கடன் உள்ளது எனலாம்.

எனவே, மேல் விவரித்துள்ள நாற்கண கருத்துருக்கள் எ நினைவில் மந்திரமாக அமைகின்றதோ அவரின் உணர்வும் வா கையும் தண்ணளியும் அறிவும் உடைய சான்றோராய் விளங் அந்தணர் நிலைக்கு உயர்ந்து சீரும் சிறப்பும் மிக்கதாக இருக் என்பது திண்ணம்.

---

**கடைபிடிக்கப்படும் புணர்ச்சி விதி :**

தொ பா. 78-ல் கூறியுள்ளபடி ஒரு சொல்லை வல்லோற் முடியற்க என்று இருப்பதால், இதனை ஒரு கோட்பாடாக ஏற்று, இ நடையில் சொற்களை பிரித்து எழுதுகையில் "கையை காட்டு" என் போன்றும், சேர்த்து எழுதுகையில் "கையைக்காட்டு" என் போன்றும் எழுதப்பட்டுள்ளது. எனவே தயவுசெய்து சந்தி குறி இவண் குற்றம் காணற்க.

# இந்நூலேடு எழுதிய ஆசிரியரும் அவர் ஆய்வுகளும்

இச்சிறு நூலேடு எழுதிய பேராசிரியர் ந. ஞானசம்பந்தன் பிறந்த ஆண்டு 1927. பிறந்த ஊர் வட ஆற்காடு மாவட்டத்தில் வாலாசா ரோடு இரயில் நிலையம் அடுத்துள்ள மருதாலம் என்னும் கிராமம். 1950-ல் சென்னை பல்கலை கழகத்தில் இயந்திர பொறியியலில் பி.இ., பட்டம் பெற்றார். அதே ஆண்டு சூன் மாதத்தில் தமிழ் நாடு அரசுக்கு உரிய சென்னை மய்ய தொழில் நுட்ப கல்லூரியில் ஆசிரியர் பணியில் சேர்ந்தார். பிறகு கோயம்பத்தூர், நாகர்க்கோவில், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் உள்ள அரசினர் தொழில் நுட்ப கல்லூரிகளில் பணியாற்றினார். 1978-ஆம் ஆண்டு நவம்பர் முதல் மீண்டும் சென்னையில் உள்ள மய்ய தொழில் நுட்ப கல்லூரியின் பேராசிரியர் தகுதியுடைய முதல்வர் பதவியில் சேர்ந்து, 1984 ஆம் ஆண்டு நவம்பர் முதல், தானாகவே பணி ஓய்வு பெற்றுக்கொண்டார்.

இன்றுள்ள நிலையில், இந்திய மொழிகளில் பல ஒற்றுமைகளும் இவ் ஒற்றுமைகளிடையே பல குழப்பமான வேற்றுமைகளும் இருப்பதை உணர்ந்தபோது இந்திய மொழிகளில் எம்மொழியில் உண்மையும் நேர்மையும் சத்தியமும் அடங்கி இருக்கின்றன, என்று கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தால் ஆசிரியர் உந்தப்பட்டார். இதனால் ஆராய்ச்சியில் ஈடுபட்டு ஆய்ந்து வந்தபோது வேதத்திலும் வேதச்சடங்குகளிலும் ஓதப்படும் பஞ்சபூத மந்திரங்களும் அவைகளுக்குரிய ஆதிமந்திர எழுத்துக்களும் தமிழ் மொழிக்குத்தான் உரியனவாய் இருந்துள்ளன, எனும் உண்மைத் தகவலை கண்டுபிடிக்க நேர்ந்தது. மேலும் இந்திய பண்பாட்டின் (heritage இன்) பெருமைகள் எல்லாம் முதன்முதலில் தமிழுக்கே உரியனவாய் இருந்து பிறகு கைமாறியுள்ளன எனும் உண்மையும் புலனாகியது. இதற்கான சான்றுகள் இன்றுள்ள எப்பழந்தமிழ் நூல்களிலும் இல்லை. மற்றும் தமிழ் மக்களின் பழக்க வழக்க பண்பாடுகளிலும் இல்லை. இவ்வாறு உள்ளநிலை ஒருபக்கம் புரியாத புதிராகவும், மறுபக்கம் மிகவியப்புக்கு உரியதாகவும் இருக்கின்றன. இதற்கான சான்றுகள் உள்ளதை இன்றுள்ள தமிழ் சொற்களில் உள்ள அகச்சான்றுகள் மூலந்தான் உண்மை என உணரமுடிகின்றன. மற்று புறசான்றுகள் ஏதும் காண

இயலாதவாறு அழிந்துள்ளன. நேர்மைக்கும் சத்தியங்களுக்கும் உண்மையுடன் உழைக்கும் வரலாறு ஆசிரியர்கள்தான் இது தொடர்பான புதிர்களை விடிக்க வேண்டும்.

அறிவியலை மனித வாழ்க்கைக்கு பயனுறச்செய்து வரும் பொறியியல் தொழில் நுட்பத்துறையில் இருப்பவருக்கு எவ்வாறு தமிழ் மொழியில் இமயம் அளாவிய ஈடுபாடு பிறந்துள்ளது? என்று ஆசிரியரை பார்த்து மற்றவர்கள் கேட்கும் கேள்வி ஒரு இயல்பாக உள்ளது. இதே கேள்வியை ஆசிரியரும் தனக்குத்தானே பல கேட்டுக்கொண்டுள்ளார். இக்கேள்விக்கு ஒரே மொழியில் பதில் கூறலாம். உலகிலேயே அளவு கடந்து வியக்கும் அளவுக்கு அறிவியல் நுட்பம் நிறைந்த மொழி கன்னிமொழிதான் • இம் மொழியை தமிழ் என்றும் அழைத்து வருகின்றனர். இத்துணை சிறப்புக்கு உரிய மொழியாக தமிழை கண்ட பிறகு, இதன் அழகில் ஒரு ஞானியும் மோகம் கொள்வர் என்பதில் ஒரு சிறிதும் ஐயம் இல்லை. அவ் அளவுக்கு அறிவழகு உடைய இறைமொழி, தமிழ் எனும் கன்னிமொழி, என்று உணரப்பட்டதே பொறியியல் தொழில் நுட்ப பேராசிரியருக்கு தமிழ் பால் பிறந்துள்ள பற்றுக்கு காரண மாயது.

இக்கருத்திற்கான கண்டுபிடிப்புகளை தமிழ் புரவலர்களிடை மாத்திரம் இன்றி மற்ற மொழிப்புலவர்களிடத்தும் பகிர்ந்து கொள்ளும் முனைப்பே இச்சிறு நூலேட்டின் நோக்கமாகும்.

இந்நூலை படிக்கும் யாவரும் தங்கள் கருத்துக்களை ஆசிரி யருக்கு தெரிவிக்கவும், மேல்விவரங்கள் அறிய இவண் கீழ்காணும் விலாசத்திற்கு முன் அறிவித்து வரவும் அன்புடன் வரவேற்கப்படு கின்றார்கள்.

விலாசம் : கன்னிமொழி, உலகமொழிகள் ஒப்பாய்வு மய்யம்

121, பசார் சாலை, சைதாப்பேட்டை

சென்னை-600 015.

✲